# தமிழ் ஆழி

தொகுப்பாசிரியர்

முனைவர் ம.சித்ரகலா
தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் ஆழி

முனைவர் க. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

8)42

தொகுப்பாசிரியர்
முனைவர் ம. சித்ரகலா
தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை– 600 050.
☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Tamil Azhi**

Compiled by: Dr. M. Chitrakala

Tamil Department

Nallamuthu Gounder Mahalingam College Pollachi.

First Edition : September, 2020

Copyright : Publisher

No.of Pages : 228

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 234 - 4010 - 1

Code No. A 4363

**₹ 300/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**தமிழ் ஆழி**

தொகுப்பாசிரியர்: முனைவர் ம. சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

முதல் பதிப்பு : செப்டம்பர், 2020

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,**

*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*

**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## III. உரைநடை

1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல் சிந்தனைகள் 4
- முனைவர் பொ.மா.பழனிசாமி

2. அரசியற் சுதந்திரமும், இலங்கையின் கல்வி வளர்ச்சியும் 5
- திலானி (இலங்கை)

3. சங்க இலக்கியத்தில் தொழில்முறைகள் 5
- முனைவர் இரா.விஷ்ணுப்ரியா

4. கவிதை வடிக்கும் கவிதைகள் 6
- முனைவர் ப.வடிவேல்

5. உலகநாதன் ஓதுவித்த வாசகம் 7
- முனைவர் க.தனலட்சுமி

6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள் 7
- முனைவர் ம.சித்ரகலா

7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள் 8
- முனைவர் ஆ.மகாலட்சுமி

8. தூது செல்லாயோ கிளியே! 9
- முனைவர் பே.மகேஸ்வரி

9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள் 10
- பேரா ர.சூர்யா

10. கவிஞர் சிற்பியின் தும்பைப் பூ மனிதர்கள் 11
- முனைவர் க.நஞ்சையன்

## IV. இலக்கிய வரலாறு

1. தமிழில் காப்பியங்களும் புராணங்களும் 11

2. இரட்டைக் காப்பியங்களில் பெயர்ப் பொருத்தம் 13

## V. படைப்பாக்கம்

1. புதினம் - சீத்தம்மா (நாவல்) 13
ஆசிரியர் - பட்சி

2. விளம்பரம் தயாரித்தல் - செய்தி எழுதுதல்

# 9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள்

- பேரா ர. சூர்யா

## முன்னுரை

நாட்டுப்புறம் என்பது முற்றிலும் கிராமியம் சார்ந்த பண்பாடு, கலாச்சார பழக்கவழக்கங்கள், செயல்பாடுகள் நிறைந்ததாகக் காணப்படும் சமுதாயம் ஆகு இச்சமுதாய அமைப்பிற்கு எனத் தனித்தனி முறையில் கலைகளைப் பொறுத்தவரை எந்தவொரு வேறுபாடும் அமையப் பெறவில்லை. தமிழர் ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக் முன்னரே வளமும் வாழ்வும் நிலைக்கப்பெற்று, கல்வியறிவு பெரும்பாலும் இல்லா நிலையிலும் கூடத் தனது சிந்தனைகளால் வாய்வழியாகவும், செயல்பாடுகளின் வழியாக மக்களிடம் தங்களது கலைகளை வாழ்வியல் விழுமியமாகக் கொண்டு சென்றன அக்கலைகள் பூமியில் நன்கு வேரூன்றி நிலத்தினை இறுகப் பற்றி செழித்து வள தொடங்கி நல்லதொரு வாழ்வாதாரமாக மக்களுக்கு உறுதுணையாக இருந்து வந்த அவ்வாறு அன்றிலிருந்து இன்றுவரை பெருகி வந்துள்ள நாட்டுப்புறக் கலைகளு தொழில்சார் கலைகளாக இருக்கும் சிலவற்றை எடுத்துக்கூறும் விதமாக இக்கட்டு அமையப் பெறுகிறது.

## கலை

கலை எனப்படுவது நுட்பமானத் தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது என இக்கலை என்ற பெரும் சக்தியானது பொழுதுபோக்கு நிறைந்தது மட்டுமல்லாமல் அ மக்களிடையே சிறந்த தகவல் ஊடகமாகவும் செயல்படுகின்றன. மனிதன் நடத்தையினாலும் அவனது கற்பனை வளத்தினாலும், தனக்குள்ள கலை நுட்பத்திறமை பல வடிவங்களில் புனைந்து வெளிப்படுத்துதலே சிறந்த கலை ஆகும். உலகில் உள்ள உயிரினங்களில் இருந்து மனிதனைத் தனிமைப்படுத்திக் காட்டுவதே அவனுக்குள்ள க நுட்பத்திறன்தான். உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒன்றிணைத்துக் கூ மனிதனின் கற்பனை வளத்தினை ஊக்குவிப்பதில் கலையானது பெரும்பங்கு வக நிற்கிறது.

கலையானது கதைப்புனைவு, நிகழ்வின் வெளிப்பாடு, மனித உணர்ச்சிகளின் தொட மற்றும் பல்வேறு தரவுகளைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இத்தரவுகளை கொண்டு நாட்டுப்புற இன மக்களிடையே கலைகள் எவ்வாறு நிலைத்திருந் அக்கலைகளிலே தொழில்சார் கலைகளின் மூலம் மக்களின் வாழ்க்கை நிலையின் சி குறித்த தகவல்கள் மேலும் மேலும் மக்கள் அனைவரும் அறிய வேண்டிய ஒன்றா நாட்டுப்புற மக்களிடையே காணப்பட்டு வந்த, இன்றைய நிலையில் நாம் கண்கூட கண்டு கொண்டு இருக்கின்ற நிகழ்வுகளைப் பற்றி இனித் தெளிவாகக் காண்போம்.

## நாட்டார்

நாட்டார் என்பவர்கள் படிக்காத, பாமர மக்கள் ஆவர். பெரும்பாலும் கிராமியப் பகுதிகளைச் சார்ந்தே வாழ்கின்றனர். "எண்ணெழுத்து" அறியாதவர்கள். எந்த ஒரு ஏட்டினையும், எழுது பொருட்களையும் கொண்டு தங்களின் வாழ்க்கையை வாழாதவர்கள். இவர்களுக்கு இறைவன் அளித்த பகுத்தறிவும், உடல் வலிமையும், மனதில் தோன்றும் உணர்ச்சி, கற்பனைகள் இவையனைத்துமே நாட்டுப்புற மக்களை அன்றாடம் வாழச் செய்கின்றன.

நாட்டார் என்று கூறக்கூடிய கிராமிய மக்களின் மூலம் எண்ணற்ற கலைகள் தோன்றியுள்ளன. அவையனைத்தும் நாட்டுப்புறக் கலைகள் என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் அக்கலைகள் தொழில்சார் கலைகளாகவும் வலம் வந்து கொண்டுள்ளன. அக்கலைகள் யாவும் இன்றைய சூழலில் எப்படிப்பட்ட தன்மையினைப் பெற்றுள்ளது என்பது நாம் அனைவராலும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

## நாட்டுப்புறக் கலைகள்

கலைகள் அனைத்திற்கும் தாயாக விளங்குவது நாட்டுப்புறக் கலைகளே ஆகும். அக்கலைகள் மிகவும் அழகு சார்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. தமிழகத்தில் கோவில்களைச் சார்ந்தே எல்லா கலைகளும் வளர்ந்து வந்துள்ளன. கோவில்களும் அங்கு நடைபெறும் திருவிழாக்களுமே கலைகளை வளர்க்கும் பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது.

மனிதனுக்கு எந்தவொரு உதவியுமின்றி இயற்கையாகத் தோன்றுகின்ற உணர்வே கலையுணர்வு. இவ்வுணர்வின் உந்து சக்தியினால் அனைத்துக் கலைகளும் உயர்வடைகின்றன. இவ்வாறு இயற்கையாகத் தோன்றி நாட்டுப்புறக் கலைஞர்கள் இயற்கையோடு இயைந்த நிகழ்வினைக் காட்டி மக்களை மகிழ்ச்சியுறச் செய்வதே நாட்டுப்புறக் கலைகள் ஆகும். ஏனெனில் இதில் வீரம், காதல், நகைச்சுவை, துயரம் எனப் பல்வேறு நிலைகளை வெளிப் படுத்தி மக்களை ஈர்க்கின்றனர். நாட்டுப்புறக் கலைகள், மரபுகள் என்றும் நிலைத்து நிற்பவை. அக்கலைகள் யாவும் உலகம் உள்ளவரை மக்களின் மனதில் நீங்காது நிற்கும்.

## நாட்டுப்புறக் கலைகளும் பொருளாதாரமும்

நாட்டுப்புறக் கலைகள் இரண்டு வகையாகச் சொல்லப்படுகின்றன. அவை நிகழ்த்துக் கலைகள், கைவினைக் கலைகள் ஆகும். நிகழ்த்துக் கலைகள் என்பன ஆடல், பாடல், கதை கூறல், விளையாட்டு போன்றவை ஆகும். கைவினைக் கலைகள் என்பன தங்களின் மரபு வழியே பின்பற்றிக் கொண்டு அதனை வளர்ச்சியடையச் செய்வது ஆகும். இக்கலைகள் முழுவதும் பண்புக்கூறும், மரபுக்கூறும், நிலவியல் வரலாறு சார்ந்ததாகவே அமைந்திருக்கின்றன.

அவற்றுள் வரைதல் கலை, மட்பாண்டக்கலை, செய்வினைக் கலை, தச்சுக்கலை, சிற்பக்கலை போன்றவைகளும் அமையப் பெற்றுள்ளன. இவ்வாறு அமைந்துள்ள நிகழ்த்துக் கலைகளிலும், கைவினைக் கலைகளிலும் நாட்டுப்புற மக்கள் தங்களது தொழில்சார் சிந்தனைகளைச் செலுத்துகின்றனர். அச்சிந்தனைகளைக் கொண்டு செயல்பாடுகளின் மூலம் பொருளாதார நிலையினை எவ்வாறு மேம்படுத்திக் கொள்கின்றனர்? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட கலைப்பிரிவுகளில் நிகழ்த்துக்கலையுள் ஆடலில் அடங்கிய கரகாட்டம், தேவராட்டம், சிலம்பாட்டம், தெருக்கூத்து நாடகங்கள் போன்றவை, தற்பொழுது தங்களின் நிலைகளில் தொய்வினை அடைந்திருந்தாலும், சில பள்ளி, கல்லூரிகளில் விழாக்காலங்களின்போது இவ்வாடல் கலைஞர்களைச் சில, பல தொகைகள் அளித்து

அழைத்து வருகின்றனர். அவ்வாறு அத்தொகையினைப் பெற்றுக் கொண்டு தங்களது பொருளாதார சிக்கலில் இருந்து இக்கலைஞர்கள் தங்களை மீட்டெடுத்துக் கொள்கின்றன இவ்வாறு கல்வி நிறுவனங்களில் இக்கலைகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம் தற்கா மாணவர்களிடையே சமூகச் சிந்தனைகள் பெருகும். இச்சிந்தனைகள் உயர்வடைவதல் மூலம் நலிவடைந்து வரும் இவ்வாறான நாட்டுப்புறக் கலைகள் அனைத்தும் மீட்டுருவாக்க செய்யப்படும் என்பது உண்மையாகிறது.

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரத்தினை எடுத்துச் சென்று சமூகத்தினிடையே பரப்புவதற்கு கலைகள் அனைத்தும் ஒரு கருவியாகப் பயன்படுகின்றன. கலை என்பது பொதுவாக மன உணர்வுகளின் வெளிப்பாடே ஆகும். குறிப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணினையும் நம்மையும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப்பிணைந்து தொடர்புடன் இருக்கச் செய்கின்றன. இந்த நாட்டுப்புறக் கலைகளின் மூலம் நம் முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாம் அறிய முடிகிறது. இக்கலைகள் பல்வேறு உண்மைத் தன்மைகளை எடுத்துரைப்பதால் சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. எனவே நாட்டுப்புறக் கலைகளைச் சிறந்த பொக்கிஷமாக வைத்துப் பாதுகாத்து வருதல் நம் கடமை ஆகும்.

நம் நாட்டின் பாரம்பரியத்தினையும் கலை மரபுகளையும் ஒதுக்கி விட முடியாது அவ்வாறு ஒதுக்கி விட்டோம் என்றால் நம்முடைய பாரம்பரியத் தன்மைகளை முழுவதுமாக இழந்துவிடுவோம். இன்று தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக எண்ணற்ற நாட்டுப்புறத் தொழில் சார்ந்த கலைகள் அழிந்து வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சில கலைகள் முற்றிலும் அழிந்துவிடவில்லை. நலிவுற்றுதான் போயுள்ளது. அழிந்துபோன கலைகளை மீட்டுருவாக்கம் செய்யவும் நலிவுற்ற கலைகளை மேம்படுத்தவும் இக்கட்டுரை உந்துசக்தியாக இருக்கும்.

அவ்வாறு அக்கலைகளை மீண்டும் செயல்படுத்த கலைஞர்களும் அக்கலைஞர்களுக்கு மக்களும் ஈடு இணையாக மனமுவந்து செயல்பட வேண்டும். கலைகளுக்குக் கலைஞர்களும், கலைஞர்களுக்கு இதர மக்களும் முக்கியத்துவம் அளித்து முயற்சியோடு செயல்பட்டு வந்தால் நாட்டுபுறத் தொழில்கள் மீண்டும் உயர்ந்து நிற்கும். இதனால் நம் நாட்டிற்குச் சிறப்பு உண்டாகும். எவ்வாறெனில்? கலைகளின் மூலம் இக்கலைஞர்களுக்கும் பொருளாதாரத்தில் பல நன்மைகள் உண்டு. ஒவ்வொரு குடும்பமும் பொருளாதாரத்தில் ஓரளவு இருப்பின் நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்திக்காத சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.

### நாட்டுப்புறக் கலைகளுள் தொழில்சார் கலைகள்

நாட்டுப்புற இன மக்களிடையே பல கலைகள் நிறைந்திருந்தாலும் அந்த அனைத்துக் கலைகளின் மூலமும் தங்களது பொருளாதார நிலையினைச் சீர் செய்ய முடியாத நிலை ஏற்படும். அக்கலைகளுள் சில கலைகளே தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாகி அமைகின்றன. அவ்வாறு அமைந்த கலைகளாவன,

மட்பாண்டக்கலை,
வரைதல் கலை,
நாட்டுப்புற மருத்துவக் கலை,
நாட்டுப்புற இசைக்கலை,
நாட்டுப்புற ஆட்டக் கலை,
செய்வினைக் கலை,
கூடை முடைதல்,
கயிறு திரித்தல்,
பாய் பின்னுதல்

போன்றவைகளே சிறந்த தொழில்சார் கலைகளாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலும் இக்கலைத் தொழில்கள் அனைத்தும் தங்களது பெருமைமிகு சேவைகளில் தோல்வியைச் சந்தித்து இருந்தாலும், அதன் வளர்ச்சியினை எவராலும் தடுத்து நிறுத்த இயலாது. ஏனெனில் மக்கள் அனைவரும் இக்கலைகளில் கைத்தேர்ந்தவர்கள் அல்லர். ஆகையால் நாட்டில் ஒவ்வொருவரின் இல்லத்திலும் மேற்கண்ட கலைகள் அடங்கிய பொருட்களே இல்லாமல் இல்லை என்ற அளவிற்கு இக்கலைப் பொருட்கள் அனைத்துமே தங்களுடைய நிலையினைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது என்பது திண்ணமே.

## மட்பாண்டக்கலை

தமிழர் வாழ்வியலில் பல்வேறு நிலைகளில் அவன் ஒவ்வொரு நிகழ்விலும், செயலிலும் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வருகிறான். கைவினைக் கலைகள் ஒவ்வொன்றுமே மக்களின் பயன்பாட்டுக்கு மட்டுமின்றி மனதுக்கும், அக்கலைஞர்களின் திறமைக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. நமது நாட்டுப்புறக் கலைகளில் தொழில் சார்ந்த கலையாக முக்கியப்பங்கு வகித்து உலகின் இறுதிநாள் வரை நாமில்லாமல் இருக்க முடியாது என்று கர்வம் கொண்டு வளர்ந்து வரும் கைவினைக் கலைகளில் ஒன்றான மட்பாண்டக் கலையும் திகழ்கின்றது.

நாட்டுப்புற மக்களிடையே மட்பாண்டக் கலையானது மிகவும் சிறப்புப் பெற்று விளங்கி வருகிறது. எண்ணற்ற கலையழகுடன் மட்பாண்டக் கலைஞர்கள் தங்களின் கைத்திறனையும், சிந்தனைத் திறனையும் காட்டி இக்கலைக்கு அனைவரும் அடிமையாகும் வண்ணம் மாற்றி அமைத்துவிட்டனர். பல நிறங்களில், பல வடிவங்களில் அதன் உருவ அமைப்பினை மேம்படுத்தி மக்களின் நவநாகரிக வாழ்விற்கு ஏற்றார்போல மட்பாண்டங்கள் மக்களின் மனதில் இடம்பெற்று விளங்கி வருகிறது.

இவ்வாறு மட்பாண்டக்கலைகள் பெரும்பாலும் நலிவுற்று வருகிறதே தவிர, என்றும் இக்கலைக்கு அழிவு என்ற நிலை வர வாய்ப்பே இல்லை. ஏனெனில் இன்றைய பரபரப்பான சூழ்நிலையிலும் கூட மக்கள் அவர்களின் இல்லத் தேவைகளையும் தங்களின் மனத் தேவைகளையும் பூர்த்தி செய்யவே இக்கலைகள் பெரும்பாலும் பயன்படுகின்றன.

பாண்டங்களின் அமைப்புகளில் மட்டுமே மாற்றம் செய்ததோடு மட்டுமல்லாமல், அதாவது தட்டு, விளக்கு, தம்ளர், வேறு சில உருவ அமைப்புகளையும் வடிவமைத்து இல்லத்தின் அழகினை மேலும் அழகுபடுத்த மற்றும் மக்களின் ஆர்வத்தினைக்கூட்டி மனத்திற்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்த இக்கலைகள் பயன்படுகின்றன. சான்றாக, குதிரை, பூச்சாடி, அலமாரி, பொம்மை, தெய்வ உருவங்கள் போன்றவைகளை எடுத்துக் கொள்ளலாம்.

## நாட்டுப்புற மருத்துவக்கலை

நமது பழங்காலப் பழக்கவழக்கங்களில் இருந்து இன்னும் பலவற்றை நாம் கடைப்பிடித்துக்கொண்டு வருகிறோம். அவற்றுள் மருத்துவக்கலை என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. அவற்றில் ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம் எனப் பல்வேறு மருத்துவமுறைகள் இருப்பினும் நாட்டுப்புற மருத்துவம் என்ற முறை இன்றும் தனித்துவம் பெற்று விளங்குகிறது.

மனிதனின் வாழ்க்கையில் மருத்துவமும், மருந்துக்கேற்ற உணவு முறைகளும் பின்பற்றிக் கொண்டு வருகிறோம். ‘ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்’ என்ற பழமொழிக்கு ஏற்பபடிக்காத பாமர மக்களும் கூட தாவரங்கள், மரம், செடி, கொடி போன்றவற்றில் மூலிகைப் பிரிவினைப் புரிந்து கொண்டு தனக்கும், தன்னை நம்பும் குடும்பத்திற்கும் ஏற்றவாறு மருத்துவப் பயனை அளித்துக் கொள்கின்றனர். மேலும் ‘வருமுன் காப்பதே சிறந்தது’ என்ற

பழமொழிக்கும் இணங்க பருவநிலைக்கு ஏற்ற கூழ், களி, சோற்று நீர், மற்றும் சின்ன வெங்காயம் போன்ற உணவுமுறைகளையும் பின்பற்றி, வரக்கூடிய நோய்களைத் தடுத்து நிறுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்தனர். அதேபோல அசைவ உணவுகளில் சிலவற்றை இரவு நேரங்களில் உண்ணக் கூடாது என்ற முறையையும் பின்பற்றி வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டார் மருத்துவ முறையை இரண்டு பிரிவுகளில் கையாளுகின்றனர். அவை,

1. இயற்கை மருத்துவம்
2. மந்திர மருத்துவம்

என்ற முறைகளாகும். இம்முறைகளில் மட்டும் இல்லாமல் தங்களின் பொருளாதார வசதியை மேம்படுத்திக் கொள்ள தொழில் சார்ந்த கலையாகவும் இம்மருத்துவ முறையைச் சமுதாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இம்மூலிகை, உணவு முறைகளோடு தங்களது மருத்துவத் தொழிலை நிறுத்திக் கொள்ளவில்லை. எண்ணற்ற மந்திரங்களைத் தங்களின் மூதாதையர்களைப் பின்பற்றிக் கற்றுக் கொண்டு மந்திரப் பாடல்களின் மூலம் நோய்களைக் குணமாக்கியுள்ளனர். பேய் ஓட்டுதல், காத்து, கருப்பு அடித்தல் என்ற மன வியாதிகளுக்கும் அக்கி வரைதல் என்ற முறையில் குணப்படுத்த பாதிக்கப்பட்ட இடத்தில் மண்ணினால் உருவம் வரைந்து மந்திரப்பாடலினைப் பாடி அதன் முறையில் அந்நோயினைக் குணப்படுத்துகின்றனர்.

இவை மட்டுமின்றி அம்மை போடுதல், விசக்கடி ஏற்படுதல் போன்ற நோய்களுக்கும் மந்திர மருத்துவ முறைகளையே கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பெரும்பாலும் கையாளுகின்றனர். இதன் மூலம் வருகின்ற தொகைகளை தங்களின் பொருளாதார வசதிக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இம்மருத்துவ முறையில் குல தெய்வத்தையும் இஷ்ட தெய்வத்தையும் வேண்டி இம்மருத்துவ முறையை நோயாளிக்கு அளித்து நோயிலிருந்து நோயாளியை விடுவிப்பர்.

**வரைதல் கலை**

வரைதல் கலை என்பது கிராமப்புறங்களில் அனைத்து மக்களாலும் விரும்பப்பட்டு வருகிறது. அவ்வாறு விரும்பும் கலையானது மட்பாண்டங்கள், பச்சை குத்துதல், கோலங்களின் மூலம் வெளியிடுதல் போன்ற முறைகளில் காணப்படுகின்றன. மட்பாண்டங்களில் வரையும் ஓவியமானது பாவை (பெண்) உருவமாகவும், விலங்குகளின் உருவமாகவும் இருக்கலாம் மேலும் வண்ண நிறங்கள் கொண்டு பல்வேறு அழகு சார்ந்த ஓவியங்களை வரைந்து மக்களின் மனதை நாட்டார் ஈர்க்கின்றனர்.

**பச்சை குத்துதல்**

பச்சை குத்துதல் என்பது கிராமப்புறங்களில் அனைவராலும் விரும்பப்படுவது. அப்பச்சையானது பல்வேறு வேதிப் பொருள்கள் இல்லாமல் அருகில் கிடைக்கும் மூலிகைப் பொருட்களை வைத்து தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தயாரிக்கும் மையின் மூலம் பல்வேறு அளவில் அமைந்த ஊசியினைக் கொண்டு கை, நெற்றி, மார்பு மற்றும் மனித உடலின் பல பாகங்களில் குத்தப்பட்டு வருகிறது.

பெரும்பாலும் தெய்வ உருவங்கள், விலங்குகள், கோலங்கள், அடுப்புக்கல் புள்ளிகள் போன்றவை பச்சையாகக் குத்தப்படுகின்றன. பச்சை குத்துவதன் மூலம் இறப்பிற்குப் பின் சொர்க்கம் நிச்சயம் என்பது கிராமிய மக்களின் நம்பிக்கையாகவும் உள்ளது. பல்வேறு கோயில்களிலும் ஊர்களில் திருவிழாக்களிலும் பச்சையை மக்கள் விரும்பி குத்திக் கொள்கின்றனர்.

ஆனால் நவீனமயமாக்கும் இக்கால கட்டங்களில், நாகரிகம் வளர்ந்துள்ள இந்நிலையில் இயந்திரங்களின் மூலமும், பல்வேறு வேதிப் பொருட்களின் மூலமும் ஆயிரக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு பச்சை குத்துகின்றனர். இதற்கு பல அழகு நிலையங்களும் தற்போது வந்துள்ளன.

### கயிறு திரித்தல்

கயிறு என்பது தமிழர் வாழ்வில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மக்களின் அனைத்து செயல்களிலும் கயிறானது முக்கியப்பங்கு வகிக்கிறது. திருமணம், திருவிழாக்கள், இறப்பு நிகழ்வு போன்ற அனைத்திலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

கிராமப்புறங்களில் தென்னை நார் கொண்டு, மக்கள் அனைவரும் குடும்பம் குடும்பமாக அமர்ந்து இக்கலை மிகுந்த தொழிலைச் செய்து வருகின்றனர். குடும்பத்திற்குள் ஒத்துழைப்பு அளித்து இத்தொழிலை ஊக்கப்படுத்தி வருகின்றனர். தற்பொழுது எண்ணற்ற இடங்களில் தேங்காய் நார், தென்னை நார் கொண்டு கயிறு திரிக்கும் தொழிலைச் செய்து வருகின்றனர்.

இத்தொழிலுக்கு சென்னையே தாயகமாக விளங்குகிறது. மேலும் பல ஊர்களில் இத்தொழில் முக்கியத் தொழிலாக உள்ளது. சூழலியலைப் பாதிக்காத வண்ணம் சிறப்புடையத் தொழில் தற்பொழுது சில காலங்களாக நெகிழிக் கயிறுகள் அதிகம் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் கயிறு திரிக்கும் தொழிலானது பெரும் பாதிப்பை அடைந்துள்ளது.

சான்றாக, நம் பொள்ளாச்சி வட்டாரத்திற்கு அருகில் உள்ள கப்பலாங்கரை, செட்டிபுதூர், தேவணாம்பாளையம் ஆகிய பகுதிகளில் நாம் சென்றால் இக்கலைத் தொழிலை நேரில் கண்டு அதன் நுணுக்கங்களையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

### சீமாறு கிழித்தல்

இக்கலைத் தொழிலும் அனைவராலும் செய்யக்கூடியது என்பது முடியாதது. மிகவும் பயிற்சி அவசியம். கத்தியைக் கொண்டு ஓலை தனியே குச்சி தனியே என்று பிரித்து வேகமாகக் கிழித்து எடுக்கின்றனர். வீட்டில் உள்ள அனைவரும், மேலும் குழந்தைகளும் பள்ளி விடுமுறை நாட்களில் ஈடுகொடுத்து இத்தொழிலைச் செய்து வருகின்றனர்.

சீமாறு கிழித்த ஓலைகளைக் கொண்டு குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, கடிகாரம், பாம்பின் அமைப்பு, கிளி இவை மட்டுமல்லாமல் பனைமரத்தின் ஓலையினைக் கொண்டு பெட்டி செய்தல், விசிறி, பல்வேறு பொருட்கள் செய்தல் போன்றவை இக்கலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

### கூடை முடைதல்

தமிழர்களின் நாட்டுப்புறக் கைத்தொழில் கலைகளில் மூங்கில் மிகவும் இன்றியமையாத முறையில் இடம் பெறுகின்றது. மூங்கிலைக் கொண்டு, கூடை, முறம், வீட்டு அலங்காரப் பொருட்களான இருக்கை, மேசை போன்ற பொருட்களைச் செய்கின்றனர். மூங்கில் வளையும் தன்மையும் கடினத்தன்மையும் உள்ளமையால் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் உள்ளது.

இத்தொழில் நலிவடையும் தன்மை ஏற்பட்டுவிடும். காரணம் நெகிழியின் மூலம் உருவான பாத்திரங்களின் பயன்பாடு அதிகம் உண்டானதன் காரணமே ஆகும். பல வண்ணங்கள், பல வடிவங்கள் என அப்பாத்திரங்கள் கண்ணைக் கவரும் வண்ணம் உள்ளன. இக்கலையின் மூலம் சிந்தனைத் திறனும், கற்பனைத் திறனும் வளர்ச்சியடைகிறது. எனவே மக்களின் வரவேற்பினைத் தேட நெகிழிகள் ஒழிய வேண்டும். நெகிழிகளின் ஒழிப்பின் மூலம் மட்டுமே நாட்டுப்புறக் கலைகளை மீட்டெடுக்க முடியும்.

## பாய் பின்னுதல்

பாய் பின்னும் தொழில் நம்மிடையே பல தலைமுறையாக நடைபெற்று வருகிறு பத்தமடைப் பாயும், அதன் நெசவுத் தன்மையும், பனை ஓலையால் கூடை முடைதலும் கை தொழிலின் சிறந்த சான்றாக விளங்குகின்றது. பாயானது கோரைப் புல்லில், பாய் நெச செய்யப்படுகிறது. கோரைப்புல்லினை முற்றியதாகப் பார்த்து எடுத்து நீரில் ஊறவைத்து சாயமேற்றி நெசவு செய்து பாய் தயாரிக்கப்படுகிறது. பாயினில் சிறந்ததாகக் கருதப்படுவ பத்தமடைப்பாய் ஆகும். ஆகவே, இந்தப் பாய் மனித உடலுக்குச் சிறந்ததாகக் கூறப்படுகிற

ஆனால், நாகரிகம் மிகுந்த இக்காலத்தில் பல வண்ணங்களில் நெகிழியின் மூல தயாரிக்கப்பட்ட பாயினை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்றார். விடுதிகளிலு விழாக்களிலும் கூட இப்பொழுது நெகிழிப்பாயே அதிகம் பயன்படுத்துகிறார்க எனவே இத்தொழிலானது தொழில் சார்ந்த கலையாக வளர்ந்து வந்துள்ளது. நெசவு கலைஞர்களுக்கும் பொருளாதாரத்தினை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

## ஆடல், பாடல், இசைக்கலைகள்

நாட்டுப்புறக் கலைகள் என்றாலே கவனத்திற்கு வருவது ஆடல், பாடல், இசைதா ஆடலுக்கென்று தனித்துவம் பெற்று விளங்குகிறது. அந்த ஆடல்களின் மூலம் அனைத்து மக்களின் ஈர்ப்பினையும் ஈர்த்து விடுகின்றனர். பாடல்கள் என்று காணும் பொழு தாலாட்டு, ஒப்பாரி, நலுங்கு, சடங்கு எனவும் பல்வேறு விதத்தில் பாடல் கலைகள் பெரு வருகின்றது. மனிதனின் இறப்பிலும், பிறப்பிலும் பாடல் அதுவும் நாட்டுப்புறப் பாட என்றுமே தனித்துவம் பெற்று விளங்குகின்றது. மேலும் இசைக்கலை என்று நோக்கு பொழுது வில்லுப்பாட்டு என்பது மகத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இறைவனின் புராண கதைகளையோ, அல்லது மன்னனின் புராணக் கதைகளையோ கூறி வில்லுப்பாட்டு பா இசைக்கப்படுகிறது.

இக்கலைக்கு என்று தனிச்சிறப்புகள் உண்டு. பொருள் அமைப்புகள் உண் இக்கலையை இறைவனுக்கென்று நிகழ்த்தும் பொழுது விதிமுறைகளை மேற்கொண் நிகழ்த்த வேண்டும். இக்கலை பள்ளிகளிலும், திருவிழாக் காலங்களிலும் கலைஞர்களா சிறப்பான முறையில் இக்கலை நிகழ்த்தப்படுகின்றது.

மேலும் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகள் என்று அனைத்தையும் பல்வேறு கருவிக கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. இக்கலைகளின் மூலம் பொருளாதார நிலையில் கலைஞர்க தீர்வு கண்டு கொள்கின்றனர். ஆடல் நிகழ்ச்சிகளில் காவடியாட்டம், தேவராட்டம் என்ப தெய்வ காரியங்களில் பெரிதும் நிகழ்த்தி வருகின்றனர்.

பெரும்பாலும் கூத்துக்கலைகளிலும், நாடகக் கலைகளிலும் பொம்மலாட்ட பாவைக்கூத்து என்பன அனைத்தையும் சமூக நிகழ்வுகளின் எதிரொலிகளுக்குத் தக்கவா கலைஞர்கள் நிகழ்த்துகின்றனர். பெண்களின் அவல நிலைகள் மது விலக்கு, சமுதா முன்னேற்றத்திற்கான கருத்தோட்டம் மிகுந்த நிகழ்ச்சிகள் நிகழ்த்தி நாட்டுப்பு கலைகளுக்குக் கலைஞர்கள் பெருமை சேர்க்கின்றனர். இக்கலைகளின் மூலம் மக்களுக் விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் நாட்டுப்புறக் கலைஞர்கள் உழைக்கின்றன அவ்வுழைப்பின் மூலம் தங்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி கொள்கின்றனர்.

## ஆடல், பாடல் இசைக்கலைகள்

திரைப்படத்தில் நாட்டுப்புறப் பாடல் வகைகள் வந்துவிட்ட நிலையிலும் பொதிகை, மக்கள் போன்ற தொலைக்காட்சிகள் இவ்வகை நிகழ்ச்சிகளை ஒளி பரப்புகின்றன. ஆகையால் அத்தொலைக் காட்சிகளுக்கு மக்கள் அனைவரும் வரவேற்பளிக்க வேண்டும்.

மக்கள் தொலைக்காட்சி நாட்டுப்புற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதைப் போல வேறெந்தத் தொலைக்காட்சியும் ஒளிபரப்புவதில்லை. அவ்வாறு சிறப்பாக ஒளிபரப்பி கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் இன்றியமையாமையை அளித்து வருகின்றனர். அவ்வாறு ஒளிபரப்பப்பட்டு வந்தாலும் பார்வையாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது, ஏனெனில் நாட்டுப்புறக் கலைகளின் மீதோ, நாட்டுப்புறக் கலைஞர்களின் மீதோ மக்களுக்கு விருப்பம் ஏற்படுவதில்லை. இக்கலைகள் உயிர்ப்போடும், கலைஞர்கள் உயிரோடும் உலகில் உலாவர வேண்டுமானால் நாம் தரும் ஊக்கமே சிறந்த வழிமுறையாக அமையும், கிராமியக் கலைகளான இத்தொழில் கலைகளை அரசும், சமுதாய அமைப்பான நாமும் போற்றி அழியாமல் காக்க வேண்டியது அவசியமாகும்.

### முடிவுரை

“இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது என காந்தியடிகள் கூறியதுபோல், இக்கலைகளும் நாட்டுப்புறங்களில்தான் வாழ்கின்றன” என்ற கருத்தினை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அதன் வழியே கலைகளை ஊக்குவிக்க கலைஞர்கள் முனைகின்றனர். அதேபோல நாட்டுப்புறக் கலைகளில் கலைகள் வளர்ச்சி அடைய தற்பொழுது வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பக் கருவிகளே தடையாக அமைந்துள்ளது. தடைகள் என எவ்வளவு வந்தாலும் நாட்டுப்புறக் கலைகள் அழிய இடமில்லை. ஏனெனில் இக்கலை ஆதி கலை. கலைகளிலேயே முதன் முதலில் தோன்றிய கலை. எனவே அழிந்து போக வாய்ப்பு இல்லை.

கூடை முடைதல், சீமாறு கிழித்தல், பாய் பின்னுதல் போன்ற தொழில்களின் மூலம் பலப்பல பொருட்கள் உருவாக்குவதன் வழியே கலைகளின் திறமையை அறிந்து கொள்ளமுடிகிறது. அடிப்படைத் தொழிலாகவும், பொருளாதாரத்தினை முடிந்த அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்யவும் இக்கலைகள் உதவுகிறது.

மேற்கண்ட பல கலைகள் நாட்டுப்புறவியலில் இருந்தாலும் அக்கலைகளின் வழியே நாட்டினது பண்பாட்டுக் கூறுகளை வளர்த்தெடுப்பதோடு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கு மேலும் பல விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக் கூடியதாகவே அமைந்துள்ளது. மக்களின் மனதில் என்றும் நாட்டுப்புறத் தாக்கமானது இருக்க வேண்டும். அத்தாக்கம் என்றுமே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் தருவதாகவே இருக்க வேண்டும்.

தற்பொழுது நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக நாட்டுப்புற விளையாட்டு, கலைகள் போன்றவற்றை மறந்து இளைஞர்கள், சிறுவர்கள், வெகுதூரம் சென்றுவிட்டனர். நாகரிகப் பாதை என்ற முறையில் பழையவை அனைத்தும் மறைந்து போகிறது. இக்கலைகளை அழியாமல் பாதுகாப்பதன் மூலம் வருகின்ற தலைமுறைகளும் நாட்டுப்புறம், நாட்டுப்புறக் கலைகள் போன்றவற்றைத் தெரிந்துகொள்ள இக்கட்டுரை நல்வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.